செய்தி வெளியீடு எண் : 2170 நாள் : 31.10.2023

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 05.04.2023 அன்று நடைபெற்ற 2023–2024–ஆம் நிதி ஆண்டிற்கான கால்நடை பராமரிப்பு பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் பட்டினச்சேரி மற்றும் கீச்சான்குப்பம் ஆகிய மீனவ கிராமங்களில் கடற்கரையோரத்தில் பாதுகாப்பு தடுப்பு சுவர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு மீன் இறங்குதளம் தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

2. அதன்படி, நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் பட்டினச்சேரி மற்றும் கீச்சான்குப்பம் ஆகிய மீனவ கிராமங்களில் கடற்கரையோரத்தில் பாதுகாப்பு தடுப்புச் சுவர்கள் அமைக்கவும் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு மீன் இறங்குதளத்தை தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்தவும் மொத்தம் ரூ.55.00 கோடி தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி

வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (NABARD-RIDF) திட்டத்தின் கீழ் நிருவாக ஒப்புதல் அளித்து அரசு 27.10.2023 அன்று அரசாணை வெளியிட்டுள்ளது.

**கூடுதல் தலைமைச் செயலாளர்**
**கால்நடை பராமரிப்பு, பால்வளம்,**
**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in